[illegible]
V23 NO 5 31.7.50.

JL
[illegible]
M50.23.5
210426

623 623 3-50.
MADRAS ... 1950

ॐ श्री गुरुभ्यो नमः

# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| Vol. 23 | விக்ருதி ஸம்வத்ஸரம் ஆஷாட-மு | No. 5 |
| புஸ்தகம் 23 | 31—7—'50 சோமவாரம் | நெ. 5 |

## ஸ்ரீ பகவத் கீதை.

*ஸ்ரீ ம. வே. ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார் எழுதியது*
[காப்பிரைட் ரிஜிஸ்டர்.]

3-வது அத்யாயத்தின் உபன்யாஸம்.

(முன் 64-ம் பக்கம் தொடர்ச்சி)

(12) தேவர்கள் யக்ஞத்தால் அபிவிருத்தியை அடைந்தவர்களாய், ப்ரஜைகளே! உங்களுக்கு விருஷ்டியாதிகளின் மூலமாய் உங்கள் ப்ரியமான அன்னாதி போக்ய வஸ்துக்களைக் கொடுப்பார்கள் அல்லவா? அப்படி அந்த தேவர்களால் உங்களுக்கு அளிக்கப்பட்ட அன்னாதிகளை வைச்வதேவாதி யக்ஞங்களால், அந்த தேவர்களுக்கு ஆஹூதி முதலானவைகள் மூலமாய் கொடுக்காமல், என்றால் அவரவர்களின் வர்ணாசிரமங்களுக்கு உசிதமான கர்மாக்களைச் செய்து தேவர்களுக்கு திருப்திப்படுத்தாமல், போஜனமே பிரதானமென்று எண்ணி தன் வயிறு வளர்க்கிறானோ அவன் தேவதாபாகத்தைக் கொடாமல் எடுத்துக்கொண்ட நரகாதி சிக்ஷைகளுக்கு அருகனான திருடனே ஆவான்.
(13) வைச்வதேவம் முதலான பஞ்சமகா யக்ஞங்களைச்செய்து

அதில் ஆஹுதி முதலானவைகளைக் கொடுத்துவிட்டு பாக்கியுள்ள அன்னாதிகளை உண்பவர்கள் ஸஜ்ஜனர்கள் எனப்படுவார்கள். அவர் கண்டனீ பேஷணீ சுல்லீ உதகும்பீ சமார்ஜனீ| பஞ்ச ஸூனாக்ருஹஸ்தஸ்ய தாபி: ஸ்வர்க்கம் ந விந்ததி" என்று கிருஹஸ்தாசிரமிக்கு இருந்துவரும் பஞ்சஸூனா எனப்படும் எல்லா பாபங்களாலும் விடுகலைபடைவார்கள். இந்த தர்மமாகிய இவர்களின் கடமையை அறியாமல் மூடர்கள் யார் தங்களுக்காகவே சமையல் செய்து வைச்வதேவாதிகள் இல்லாமல் சாப்பிடுவார்களோ அவர்கள் பாபத்தையே புஜிக்கின்றனர் என்றால் அவர்களுக்கு பாபமே வந்துசேரும். (14) ஆதலால் அவரவர்களின் வர்ணாசிரமங்களுக்கு உசிதமான தேவதா ப்ரீதிகரமாயுள்ள வைச்வதேவாதி கர்மாக்களைச் செய்யத்தான் வேண்டும். தவிரவும் மற்றொரு காரணமாகும் சொல்கிறேன் கேள். ஒருவன் சாப்பிடும் அன்னமானது, அவன் ஆணாயிருந்தால் அவனுக்கு சுக்லமாகவும், சாப்பிட்டவள் பெண்ணாய் இருந்தால் அவளுக்கு ரக்தம்—சோணிதமாகவும் மாறுகிறது. ஆணும் பெண்ணும் புணருவதால் சுக்ல சோணித ஸம்பந்தம் ஏற்பட்டு, இவ்வாறு அன்னத்தால் பிரஜைகள் உண்டாகின்றனர். அன்னம் அரிசி முதலானவைகளால் சமைக்கப்பட்டது. அரிசியோ நெல் முதலான தானியங்களால் ஏற்படுகிறது தானியங்கள் மழை பெய்வதால் உண்டாகின்றன. மழை என்பது மேகத்தால் உண்டாகிறது. எல்லா மேகங்களும் மழையை பொழிவதில்லை, மேகசக்ரங்களுக்கு அபிமானி தேவதையான பார்ஜன்யன் மகிழ்ந்தான் என்றால் அவனால் உண்டாகிறது. அந்த தேவதைக்கு மழை பெய்விக்கும் சக்தி சந்தோஷம் முதலானவைகள் எப்படி உண்டாகிறது என்றால், தேவர்களின் உத்தேசமாய் ஹவிர்பாகாதிகளைக் கொடுக்க ஸந்தர்ப்பம் அளிக்கும் வேதவிஹிதமாயுள்ள யக்ஞத்திற்கு அங்கமான கர்மாக்களைச் செய்வதால்தான். ஆகலால் யக்ஞம் கர்மத்தால் உண்டானது. (15) யக்ஞத்திற்கு அங்கபூதமாயுள்ள அந்த கர்மாக்களைச் செய்வது பரபிரம்மமாகிய பகவான் நாராயணருடைய பிரேரணையால்



210426.



தான் என்பதை அர்ஜுனா! அறிந்துகொள். அந்த பரபிரம்மம் அக்ஷர ஸமூஹமாகிய வேதத்தாலேதான் அறியப்படுபவன். பரபிரம்மத்தை வேறு எந்த பிரமாணத்தாலும் அறிந்துகொள்ள முடியாது. ஆகலால் கீழே விவரித்தபடி ப்ரம்மமாகிய பகவான் எங்கும் வியாபித்திருந்தபோதிலும் யக்ஞத்தில் அவர் ஸந்நிதானம் பெற்றிருக்கிறார். (16) அர்ஜுனா! இந்த ஏற்பாடு ஒன்றின்பின் ஒன்றாக சக்ரம்போல் பகவானால் சுழன்றுவரச் செய்யப்படுகிறது. அதாவது ஜனங்கள் ஸ்பஷ்டமாய் உச்சரிப்பதால் அக்ஷரங்கள் உண்டாகின்றன அக்ஷர ஸமூகமே வேதமாதலால், ஜனங்கள் உச்சரிப்பதால் வேதம் அபிவ்யக்தி அடைகிறது. அபிவ்யக்தி அடைந்த வேதத்தால் ஸ்பஷ்டமாய் பரமாத்மாவின் க்ஞானம் ஏற்படுகிறது. இவ்வாறு நன்கு அறிந்துகொண்டானாகில் அதாவது இவ்வாறு பகவத்க்ஞானம் அடைந்தவனிடம் பகவான் மகிழ்ந்து, யக்ஞத்திற்கு அங்கபூதமாயுள்ள ஸத்கர்மாக்களை அவனை செய்யும்படி அனுக்ரஹிக்கிறார். அந்த ஸத்கர்மாக்களைச் செய்யும்பொழுது, தேவர்களின் உத்தேசமாய் ஹவிஸ்ஸுகள் முதலானவைகளைத் தரம்படும்பொழுது, அதுவே யக்ஞம் என்றுபெயர் அடைகிறது. இவ்வாறு தேவர்களின் உத்தேசமாய் அந்த யக்ஞாதிகளில் ஹவிஸ்ஸுக்களைத் தந்து, அவர்களை மகிழ்விக்கவும், அந்த யக்ஞத்தால் மேக சக்ரங்களுக்கு அபிமானியான பர்ஜன்யனுக்கு சக்தியாதிகள் உண்டாகின்றன அந்த பர்ஜன்யன் விருஷ்டியை உண்டாக்க அவனால் அன்னம் உண்டாகிறது. அன்னத்தால் ப்ராணிகளின் சரீரம் உண்டாகிறது. அந்த சரீரம் விருத்தியடைந்து ப்ரஜைகள் அக்ஷரங்களை உச்சாரணம் செய்து வேதத்தை அபிவ்யக்தி செய்கின்றனர் மேலே கூறிய காரியங்கள் எல்லாம் சக்ரம்போல் ஒன்றன்பின் ஒன்றாய் நடந்து வருகின்றன. யக்ஞம் கிருகஸ்தாசிரமிக்கு இருப்பதுபோல் பிரம்மசாரி ஸன்யாஸி முதலான இதர ஆசிரமத்தார்களுக்கும், தானயக்ஞம், வாசகயக்ஞம், மானஸயக்ஞம் உண்டு. இவ்வாறு பரமாத்மாவால் ப்ரவிருத்திக்கப்பட்டு நடந்துவரும், வேதாபிவ்யக்தி முதலான ஜகத் சக்ரத்தை. யார் அனுஷ்டிக்காமல் அதை

கெடுத்துவிடுவானே, என்றால், வர்ணாச்ரமோசிதமான கர்மாக்களைச் செய்யாமல் சக்ரத்தை சுழன்றவாமல் நிறுத்திவிடுவானே, அவனுடைய பிழைப்பு பாபத்தை ஸம்பாதிப்பதிற்கே காரணமாகும். அவன் விஷயானுபவத்திலேயே திருப்தியடைந்தவன் ஆவான். ஆகலால் அவன் பிழைப்பு வீணேயாகும். அவன் நரகத்திலேயே தள்ளப்படுவான். ஆகலால் நீ உன் வர்ணாச்ரமோசிதமான கர்மாவைச் செய்யவேண்டும். (17)

இதற்குமேல் மற்றொரு சந்தேகம் வரகூடும். கர்மாவைச் செய்யத்தான் வேண்டுமென்பதால், கர்மாவை செய்பவனுக்கு தேவதா அனுகூல்யமும், கர்மாவைச் செய்யாமல் விட்டவனுக்கு நரகாதி அனர்த்தங்களும் உண்டாகும் என்று சொல்லப்பட்டபின், அபரோக்ஷ க்ஞான மடைந்தவன் பகவானிடம் மனம் லயித்துப்போய் அஸம்ப்ரக்ஞாத ஸமாதியில் இருக்கும்பொழுது. அவனுக்கு கர்மாக்களைச் செய்வது முடியாமற் போகுமே! அதனால் அவனுக்கு கர்மலோபம் ஏற்படுமே! அதனால் அவன் கர்மத்திற்கு ப்ராதான்யம் கொடுத்து அஸம்ப்ரக்ஞாத ஸமாதியை அனுஷ்டிக்காமல் விட்டுவிடவேண்டியதுதானே என்றால், யார் பரமாத்மாவை ஹ்ருதயத்தில் கண்டு அதனால் ஏற்பட்ட பரமானந்தம் கொண்டவரோ, இதர ஸுகங்களை துச்சமாக பாவித்து அவைகளை வெறுத்தவரோ, பகவான் ப்ரஸன்னராகிவிட்டு அவரிடம் தான் திருப்தி அடைந்தவராய், அவர் அல்லாத இதர விஷயங்களில் ஸம்பூர்ண மனதுடன் விருப்பமில்லாதவரோ, அந்த பகவத் ஸமாதிஸுகம்தான் அதாவது பகவத் த்யானத்தில் இருக்கும் நிலைதான் மஹத்தான ஸுகமாய்போய் அதின் அனுபவம்தான் யாருக்கு இருந்துவருகிறதோ, அவர் அந்த பகவத்தரிசினமாகிய பரமானந்தத்தை அனுபவிக்கும்பொழுது, அதாவது அபரோக்ஷ க்ஞானி அஸம்ப்ரக்ஞாத ஸமாதியில் இருக்கும்பொழுது அவர் செய்யவேண்டிய த்ரிகால ஸந்தியாவந்தனம். ஜபஹோமம் முதலான கர்மாக்களைச் செய்யாமல் இருந்துவிடலாம்.

(தொடரும்)





## ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் 73ம் பக்கம் தொடர்ச்சி) 210426

ஸ்ரீ விஜயீந்திரரிடம் இணையற்ற விசுவாசம்கொண்ட கும்பகோணம் மகாஜனங்கள் ஒவ்வொருவரும் அவ்வாறே அஞ்சாமல் செய்யவும், நெருப்பு ஜ்வாலைகள் அக்ஷணமே அவித்து போனதுடன், கீச்சு கீச்சென்று சப்தித்துக்கொண்டு அந்த துணிப் பந்துகள் கையிலிருந்து தப்பி ஆகாயத்திற் பறந்து மறைந்துவிட்டன. இதைக்கண்டு எல்லோரும் பரமாச்சரியமடைந்தார்கள். ஸ்ரீ விஜயீந்திரரை இதன் மர்மத்தை அறியக் கேட்டனர். அதற்கு ஸ்ரீ விஜயீந்திரர் "இது ஓர் பக்ஷிஜாலம். இந்த வித்யை மிகவும் சாமானியமானது. இவ்வளவு நெருப்புப் பந்துகள் விழுந்ததே! ஒருவருக்காவது இதனால் நெருப்புகாயம் உண்டா? யாரையாவது சுட்டதா? யோசித்துப் பாருங்கள். நீங்கள் இங்கு தினம் வந்து கூடி என்னிடமிருந்து உபதேசம் பெறுவதை அவர் சகிக்கவில்லை. நீங்கள் இங்கு வரலாகாதென்பதற்காக இந்த காரியங்களை அவர் முதலில் செய்யத் துவக்கியிருக்கிறார். உங்களை விரட்டிவிட்டு என்மீது ப்ரயோகம் செய்யப்போகிறார். நான் பயப்படாமல் அவருடைய எந்த காரியத்தையும் எதிர்ப்பேன். இனி உங்களிடமும் இந்த பீதிகரமான காரியம் அணுகாதிருக்க இன்று இரவே கருடமந்திரத்தை ஜபிக்கிறேன். அவர் உங்களை ஸம்ரக்ஷிப்பார்" என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்.

வழக்கப்படி மாலை ஆன்ஹிகங்களை முடித்து ஸ்ரீ விஜயீந்திரர் ஸ்ரீ கருட உபநிஷத்தை ஆவர்த்தி ஜபம்செய்தார். மறுநாள் சூரியோதய காலத்தில் அந்த லிங்காயத மடத்தின் கொல்லைப் புறத்தில் க்ஞானதிருஷ்டியால் ஓர் இடத்தை குறிவைத்து, அங்கு தன் தண்டகாஷ்டத்தைப் பாய்ச்சினார். அதனால் ஓர் பெரும்பள்ளம் ஏற்பட்டு பூமியிலிருந்து, அமிர்த்துக் கொப்பான, ஜலம் மேலே பொங்கிவந்தது. ஆகாயத்திலேயும் ஓர் கருடன் அந்த இடத்தின்மீது வட்டமிட்டு தன் சப்தங்

களால் பரம மங்களத்தை சூசித்தது. ஸ்ரீ விஜயீந்திரர் அந்த கிணற்றுக்கு கருடதீர்த்தம் என்று நாமகரணம் இட்டார். அதை ஓர் கல்கிணறாய் கட்ட ஏற்பாடு செய்தார். அந்த தீர்த்தத்தின் காற்று வீசும் அந்த லிங்காயத மடத்தில் எந்த ஆபத்தும் இனி ஏற்படாது என்று அறிவித்தார். இச் செய்தியும் நகரெங்கும் பரவியது.

அன்று உபன்யாஸகாலத்திலும் பெருங்கூட்டம் கூடியது. என்ன அன்று நடக்கப்போகுமோ என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாய் பேசிவந்தனர். கருடதீர்த்தம் ஏற்பட்டுவிட்டதால் விஷ ஜந்துக்களின் பாதை அங்கு ஏற்படமாட்டாது என்று பலர் உறுதிகொண்டனர். அன்று உபன்யாஸம் எந்த சம்பவமன்றியில் முடிவடைந்தது. எல்லோரும் ஸ்ரீ விஜயீந்திரரின் யோக சாமர்த்தியத்தைப் புகழ்ந்துகொண்டு ஜனங்கள் வெளியேறினர். கட்டிடத்தின் வெளியேதான் அன்று தொல்லைகள் ஏற்பட்டன. பதினாயிரக்கணக்காய் ஈசல்களும், தேனீக்களும் பெரிய பெரிய கொசுக்களும் அனைவரையும் ஜனங்களை சூழ்ந்து ஹிம்சித்து ஒருவரையும் வெளியே போகமுடியாமல் செய்துவிட்டன. இவ்வாறு கட்டிடத்தின் வெளியே நடப்பதை அறிந்து, ஸ்ரீ விஜயீந்திரர் "பக்ஷிராஜன் இந்த கட்டிடத்தின் வெளியேயும் உங்களுக்கு ஸர்வ மங்களத்தை அளிக்கட்டும்" என்று அபயப்ரதானம் செய்தார். கருடமந்திரத்தை ஜபித்தார். அவர் சொல்லி சிறிது நேரத்திற்கெல்லாம், அவருடைய இந்த லிங்காயத மடத்தின் எதிரில் இருந்த, ஸ்ரீ ஆதி கும்பேசுவரரின் ப்ராகாரத்தின் பொந்துகளிலிருந்து, நூற்றுக்கணக்கான புறாக்கள், இந்த மடாலயத்தின் வெளிவாசலில் சுற்றி சுற்றி வந்து எல்லா பூச்சிகளையும் கொத்தி கொத்திக்கொன்று விழுங்கி ஜனங்கள் தாராளமாய் வெளியே போக சௌகரியம் செய்து கொடுத்துவிட்டன. புறாக்களும் வந்தஇடம் தெரியாமல் பறந்து போயின. அச்சமயம் ஆகாயத்தில் ஓர் கருடன் வட்டமிட்டுக் கொண்டு மங்களத்வனியைக் கொடுத்தது. இதைப்பார்த்துவிட்டு "கருடன் பக்ஷிராஜன் அல்லவா! அவருடைய ஆக்ஞையால் இந்த புறாக்கள் தொண்டு செய்திருக்கவேண்டும்" என்று ஜனங்கள் பேசி பரமாச்சரியமடைந்தனர்.



ஸ்ரீ விஜயீந்திரர் கருடதீர்த்தத்தை இந்த மடாலயத்தின் சமீபம் நிர்மாணம் செய்தபின், இங்கு லிங்காயதனின் எவ்வகை ஏவல் வேலையும் தலைகாட்டவில்லை. எந்த சம்பவமும் நடக்கவில்லை. மகாஜனங்களின் கூட்டமும் ஸ்ரீ விஜயீந்திரரின் உபன்யாஸங்களும் யாதொரு விக்னமின்றி நடைபெற்றுவந்தன. லிங்காயதகுரு ஒருவாறு ஒடுங்கிப்போய்விட்டதாகவே ஜனங்கள் கருதினர். ஸ்ரீ விஜயீந்திரரும் அந்த லிங்காயத மடத்தை பந்தோபஸ்து செய்துவிட்டதாய் மனம் சமாதானமடைந்து, காவேரிக்கரையில் கஸ்யப தீர்த்தம் கொண்ட தனது பழைய மடத்திலேயே வசிக்க ஏற்பாடு செய்துகொண்டார். அங்கு போய் சிறிதுகாலமாயிற்று. ஸ்ரீ விஜயீந்திரரின் சரீர ஆரோக்யம் மாறியது. அடிக்கடி குளிர் ஜ்வரம் பாதித்து வந்தது. அன்ன ஆஹாரம் குறைந்தது சக்தி குன்ற ஆரம்பித்தது. ஸ்ரீ விஜயீந்திரர் சுயம் ஆயுர்வேதத்தை நன்கு அறிந்து, இதரருடைய கடுமையான உபாதிகளுக்கு மருந்து கொடுத்து பழக்கமுள்ளவராதலால், தனக்கு ஏற்பட்டிருக்கும் உபாதிக்குத் தகுந்த மருந்துகளை தயாரித்து சாப்பிட்டுவந்தார். அதனால் இவருடைய சரீர நிலை குணமடையவில்லை. தன் மருந்து உபாதியை நிவிருத்தி செய்வதாய் தெரியவில்லை. உத்தமமான மருந்தும் உபாதியை சொஸ்தப்படுத்தாமற்போகவே, ஸ்ரீ விஜயீந்திரர் தன் ஆன்ஹிக காலத்தில், யோக சக்தியைக்கொண்டு இதன் காரணத்தை யோசித்தார். உடனே உண்மை வெளியாயிற்று. லிங்காயத குரு தன்னைக் கொன்றுவிட பலிஷ்டமான ஓர் மாரண ப்ரயோகம் செய்து வருவதாய் தெரியவந்தது. இதற்கு பரிஹாரம் மந்திரசக்தியால்தான் ஏற்படவேண்டுமே அல்லாது வைத்தியம் செய்வது உபயோகமில்லை என்று நிச்சயங்கொண்டார்.

ஓர் அபூர்வ மந்திர சக்தியை ஓர்வகை ஹோமம் செய்து அடையப்பெற்றார். தனக்கு அடிக்கடி வரும் குளிர் ஜ்வரத்தை ஓர் பாக்கு மரத்தில் நிலைநிற்கும்படி செய்தார். குளிர் ஜ்வரம் வரும் சந்தர்ப்பத்தில் அந்த பாக்குமரம் பெரும காற்றால் அடிப்பட்டபடி அதிகமாய் ஆடும். ஜ்வரம் ஏற்பட்டது தெரிய அந்த பச்சை மரம் தொட்டால சுடும். தன்னிடம்

நிலைக்கும்படி செய்து தன் உடம்பை ஒடுக்கும் சோஷண உபாதியையும் ஓர் சிறிய மாமரத்தில் ஆரோபணம் செய்வித்தார். அதனால் அந்த மரத்தின் இலைகள் எல்லாம் நாளடைவில் சிறுத்துப் போக ஆரம்பித்தன. கிளைகளும் உலறத்துவங்கின. அதனால் ஸ்ரீ விஜயீந்திரர் உபாதி நீங்கி சொஸ்தமானார். அந்த மரங்களுக்கு மந்த்ரபூதமான ஜலத்தை தினம் வார்த்துவந்தார். ஸ்ரீ விஜயீந்திரர் செய்த இந்த அபூர்வ மந்திர ப்ரயோகத்தைப் பற்றி ஜனங்கள் எங்கும் பேசிவந்தனர். இந்த மரங்களை நேரில் பார்த்துப்போக நூற்றுக்கணக்கான ஜனங்கள் தினம் வந்து போயினர். பல மாதங்கள் ஜபித்தும், ஸ்ரீ விஜயீந்திரர் சொஸ்தமாய் இருப்பதாகவே செய்திவந்தவுடன், லிங்காயதகுரு தான் மந்திரம் ஜபிப்பதை கைவிட்டார். ஸ்தாவர பதார்த்தங்களுக்குத்தான் உபாதி ஏற்பட்டிருப்பதாய் கேட்டு லஜ்ஜை அடைந்தார். தன் மந்திர ப்ரயோகம் வீணாக்கப்பட்டுவிட்டதைக் கேட்டு மனம் நொந்தார்.

மிக்க சிரமப்பட்டாவது ஸ்ரீ விஜயீந்திரரைக் கொன்றுவிட மந்திர சாஸ்திரங்களை விமரிசித்தார் மகாமகதீர்த்தத்தின் ஜலத்தில் ஒருவாரம் ஜலதஸ்தம்பனத்கால் மூழ்கி இருந்து மந்திர ஜபம் செய்து ஸ்ரீ விஜயீந்திரருக்கு ஜலோதரம் ஏற்படச் செய்தார். அதனால் ஸ்ரீ விஜயீந்திரரின் வயிற்றில் ஜலம் நிரம்பி அது வரவர உப்பிப்போய் சுவாசபந்தமும் ஏற்பட்டுவிட்டது. ஸ்ரீ விஜயீந்திரர் இந்த உபாதியும் லிங்காயத குருவின் ஏவல் வேலை என்று நிச்சயம் கொண்டார். கசியபதீர்த்தக்கரையில் முளைத்திருந்த ஓர் வாழைமரத்தின் மேல்பாகத்தை வெட்டச்செய்தார். ஸ்ரீ விஜயீந்திரர் தன் வயிற்றுக்கும் அந்த வாழைக்கட்டைக்கும் மந்திர சக்தியால் சம்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார். அதனால் ஸ்ரீ விஜயீந்திரரின் வயிற்றில் லிங்காயத குருவின் மந்திரசக்தியால் நிரம்பிவரும் ஜலமெல்லாம், தீர்த்தக்கரையில் இருந்த வாழைக்கட்டையின் வழியாய் வழிந்து கசியபதீர்த்தத்தில் விழுந்துவந்தது. (தொடரும்)



## ஸ்ரீ ஜகந்நாததாஸர் இயற்றிய ஹரிகதாம்ருதஸாரம்

### 22வது பிருஹத் தாரதம்ய ஸந்தி

---

(முன் 47-ம் பக்கம் தொடர்ச்சி)

இவர்களில் ஆதிசேஷனின் பத்னியான வாருணிதேவி, மகாலட்சுமியின் ஆவேசம் கொண்டவளாய் ரேவதராஜனின் மகளான ரேவதி என்னும் பெயர்கொண்டவளாய் பலராமரின் பத்னியானாள். இந்த ரேவதியுடன் மகாலட்சுமியின் ஆவேசமிருந்ததால் இவள் ஸ்ரீ என்றும் அழைக்கப் பெற்றாள். வாருணி என்ற மூல ரூபத்துடன் பானம் செய்யத் தகுந்த வாருணி என்னும் கள் ரூபத்துடன் பலராமரை திருப்திப்படுத்தினாள். பார்வதி முதலானவர்கள் அவர்களின் பர்த்தாக்களுக்கு 10 குணங்களால் குறைந்தவர்கள். மேல்கண்ட ஸ்ரீ கிருஷ்ணரின் பட்டமகிஷிகள் மேன்மை பெற்றதற்கு காரணங்களாவன: நீலாதேவி குமார க்ஷேத்ரத்தில் கடுமையான தபஸ்செய்து ஸ்ரீனிவாஸனின் யாத்திரையை அனுஸந்தித்ததின் புண்யத்தால் ஸ்ரீ கிருஷ்ணரின் பத்னியானாள். பத்ராதேவி கனராஜனின் மகள். ப்ரதக்ஷிணை நமஸ்காரங்களாகிய தபஸ்ஸால் பகவானை மகிழ்வித்து ஸ்ரீ கிருஷ்ணரின் பத்னியாகும் பாக்யம் கொண்டாள். காளிந்திதேவி விவஸ்வான் என்னும் சூரியனின் மகள். ஸ்ரீ ஹரிநாமத்தை ஸங்கீர்த்தனம் செய்தல், அவருடைய ரூபத்தை த்யானம் செய்தல் ஆகிய தபஸ்ஸால் பகவானை மகிழ்வித்து அந்த புண்ய ப்ரபாவத்தால், ஸ்ரீ கிருஷ்ணரின் அங்கஸங்கம் பெறும் பட்டமகிஷியானாள். லக்ஷணாதேவி பர்ஹிஷதராஜனின் மகள். ஸ்ரீ ஹரியின் சரீர லக்ஷணங்களில் அவள் லக்ஷ்யம் வைத்து நினைத்து வந்திருந்தாள். அதனால் அவள் லக்ஷணை என்று பெயர்கொண்டவளாய் அந்த பகவத்த்யானத்தின் மஹிமையால் ஸ்ரீ கிருஷ்ணரின் பத்னியானாள். மித்ரவிந்தா தேவி ஸ்ரீ ஹரிகதா சிரவணம் எப்போதும் செய்திருந்தாள். அதனால் மிக்க திடமான வைராக்யம், க்ஞானம், பக்தி இவை

களைப் பெற்று பகவானை எப்போதும் ஸேவித்திருந்தாள். அந்த புண்ய ப்ரபாவத்தால் பகவானுடைய ஷண்மஹிஷிகளில் ஒருவள் ஆனாள். பகவானுடைய அங்கஸங்கம் ஏற்பட்டதன் நிமித்தம் அவர்களில் மகாலட்சுமியின் ஆவேசம் உண்டு என்பதை அறிய வேண்டும். இவர்களைவிட ஜாம்பவதி தேவியிடம் அதிகமாய் மகாலட்சுமியின் ஆவேசம் உண்டு. "நீலா பத்ரா மித்ரவிந்தா காளிந்தி லக்ஷ்ணா ததா| ஜாம்பவத்ய: கிஞ்சித் ஊனா தேவ்யா வேஷயுதா அபி| தேவ்யாவேச ஹ்ராஸகாலே ப்ரத்யும்னாத் த்வி சதர் திகா" என்றும் "விஷ்ணு ஸ்த்ரியோ ஜாம்பவதீ நீலா பத்ராச லக்ஷ்ணா| காளிந்தீ மித்ரவிந்தாச சேஷாத் பஞ்சகுணாதமா" என்றும் பிரமாணம் காணப்படுகிறது. (15) ஆதிசேஷனின் அம்சத்துடனும் பகவானின் அம்சத்துடனும் சேர்ந்த நாராயணர்களில் நரர் என்பவர் ஆதிசேஷனின் அவதாரம் என்று அவருடைய அவதாரங்களை சொல்லப்படும்பொழுது சொல்லப் பட்டிருக்கிறது. அந்த நரன் என்பவருடைய அம்சத்துடனும் ஸ்ரீ ஹரியின் விசேஷ அம்சத்துடனும் சேர்ந்த இந்திரன் அர்ஜுனனானன். அப்படியே இந்த வைவஸ்வத மன்வந்தரத்தின் இந்திர பட்டம் பெற்றவன் புரந்தரன். குசராஜனின் மகனான காதிராஜன், ஸ்ரீ ராமசந்திரனின் இரட்டைப்பிள்ளைகளான லவகுசர்களில் குசன், சாக்ஷுஷமன்வந்தரத்தில் இந்திரபதமானும் மந்த்ரத்யும்னன், இஷ்வாகுராஜனின் மகனான விகுக்ஷிராஜன், சுக்ரீவனுடைய அண்ணாவான வாலி, ஆக மேற்கண்ட ஏழுபேர்களும் இந்திரனின் அவதாரம் ஆவார்கள். ஸ்ரீ ராமசந்திரனின் தம்பியான பரதன், பிரம்மாவின் ஆவேசம் கொண்டவனான ஜாம்பவதி மகன் ஸாம்பன், பகவானின் கையில் இருக்கும் ஸுதர்சனம் என்னும் சக்ராயுதம், ஸ்ரீ கிருஷ்ணரின் மகனான ப்ரத்யும்னன், ஸனகர் ஸநந்தனர், ஸனத்குமாரர், ஸனத்ஸுஜாதர் என்ற நான்கு பிரம்ம புத்திரர்களில் ஒருவரான ஸனத்குமாரர், ஷண்முகனான ஸுப்ரம்மண்யன், மன்மதன் ஆகிய இவர்கள் எல்லோரும் மன்மதனின் அவதாரங்கள். "ப்ரத்யும்ன யுக்த: ப்ரத்யும்னோ பரதஸ்ச ஸுதர்சன:, ப்ரம்மயுக் ஸாம்ப ஸ்கந்த ஸ்ரீ குமார: காம உச்யதே" என்று பிரமாணம்



அறிவிக்கிறது. (16) பரமசிவனின் பத்னியான பார்வதி, ஆதிசேஷனின் பத்னியான வாருணி இவர்களைவிடவும் இந்திரனும் மன்மதனும் பத்து குணங்களால் குறைந்தவர்கள். இந்திரனுக்கு சரீராபிமானியான அகங்காரிக ப்ராணன் பத்து குணங்களால் குறைந்தவன். ப்ரத்யும்னனின் ரூபங்கொண்ட மன்மதனின் மகனான அநிருத்தன் என்ன, மன்மதனின் பாரியாளான ரதிதேவி என்ன, ப்ரம்மாவின் மகனான தக்ஷபிரஜேசுவரர் என்ன, தேவர்களின் குருவான பிருஹஸ்பத்யாசாரியாள் என்ன விருத்ராஸுரனின் சத்ருவான தேவேந்திரனின் பாரியாளான சசீதேவி என்ன, ஸ்வாயம்புமனு என்ன இவர்கள் ஆறுபேர்கள் ஸமானர்கள். இவர்கள் அஹங்காரிக ப்ராணனுக்கு பத்து குணங்களால் குறைந்தவர்கள் எனப்படுவார்கள். (17) ப்ரத்யும்னனின் மகனான அநிருத்தன், ஸீதாபதியான ஸ்ரீ ராமசந்திரனின் தம்பியான சத்ருக்னன், பலராமனின் தம்பியான ஸ்ரீ கிருஷ்ணரின் பேரனான அநிருத்தன் இவர்கள் அநிருத்த மூர்த்தி பகவானின் ஆவேசங்கொண்டவர்கள். மன்மதனின் பாரியாளான ரதிதேவியின் அவதாரங்களாவன:—ஸ்ரீ ருக்மணி தேவியின் ஸகோதரனான ருக்மியின் பெண்ணான ருக்மவதிதேவி, உத்தமமான பெயர்கொண்டவளான துரியோதனின் பெண்ணான லக்ஷ்ணா இவர்கள்தான். இந்திரனின் பாரியாளான சசீதேவிக்கு, பாண்டியதேசாதிபதியான வீரசேனனின் மகளான சித்ராங்கதையும், வாலியின் பாரியாளான தாரையும் அவதாரங்கள் என்று பிரசித்தமானவர்கள். (18) தாரன் என்னும் வானரன் த்ரேதாயுகத்தில் ஸீதாபதி ஸ்ரீ ராமசந்திரனை ஸேவை செய்தான், வாயுபகவானின் ஆவேசங்கொண்ட உத்தவன் ஸ்ரீ கிருஷ்ணருக்கு நண்பன் என்று எண்ணப்படுவான், பிரம்மாவின் ஆவேசங்கொண்டவர் த்ரோணாசாரியார், இம் மூவர்கள் பூலோகத்தில் பிருஹஸ்பதியின் அவதாரங்கள் என்று ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

## அவதூத கீதை.

(முன் 70-ம் பக்கம் தொடர்ச்சி)

இதரர்கள் எதைச்சொன்னாலும் எதைச் செய்தாலும் இவனுடைய மனம் கலக்கமடையலாகாது. எது வந்தாலும் சரி, வராவிட்டாலும்சரி ஒரேமாதிரியாகவே யோகி இருக்கவேண்டிய தவசியம். "முனி: ப்ரஸன்ன கம்பீரோ துர்விகாஹ்யோ துரத்யய:| அநந்த பாரோ ஹ்யக்ஷோப்ய: ஸ்திமிதோத இவார்ணவ:| ஸம்ருத்த காமோஹீனோவா நாராயண பரோ முனி:| நோத்ஸர்ப்பேத நசுஷ்யேத ஸரித்பிரிவ ஸாகர:" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

11. விட்டில் பூச்சி (பதங்கம்). இது ஓர் குரு. இதும் ஓர் படிப்பினையை கற்றுக்கொடுத்திருக்கிறது. இந்தப் பூச்சி நெருப்புடன் எரியும் விளக்கை சாப்பிடும் ஓர்பழம் என்று ப்ராந்தி அடைந்து அந்த ஜ்வாலையில் விழுந்து தன் நாசத்தை நாடுகிறது. அதுபோல் பகவான் ஸ்ருஷ்டி செய்திருக்கும் மோஹனசக்தி படைத்துள்ள பர ஸ்திரீகளைப் பார்த்துவிட்டு, அவர்களின் ஹாவபாவ விலாஸங்களால் புத்தி மயங்கி அவர்களிடம் ஸங்கமடைய, இந்திரிய ஜயமில்லாதவன் எத்தனித்து, இஹத்திலும் பரத்திலும் தன் நாசத்தையே அடைகிறான். ஸ்திரீ ஜனங்கள் படுக்கும் படுக்கையிலும், உடுத்த வஸ்திரத்திலும், பூண்ட பூஷணங்களிலும் உபயோகிக்கும் வஸ்துக்களிலும் பகவன் மாயையால் அபாரமான ஆசைகொண்டு அவளுடன் ஸம்போகிப்பது தனக்கு பரமஸுகமென்று எண்ணிவிட்டு நரகாதி அநர்த்தங்களை இந்திரியஜயமில்லாதவன் அடைகிறான் என்னும் படிப்பினையை விளக்குபூச்சி அறிவிக்கிறது. "த்ருஷ்ட்வா ஸ்திரியம் தேவமாயாம் தத்பாவை ரஜிதேந்திரிய:| ப்ரலோபித; பதத்யந்தே தமஸ்யக்னௌ பதங்கவத்|| யோஷித் ஹிரண்யாபரணாம்பராதி த்ரவ்யேஷு மாயாரசிதேஷு மூட:| ப்ரலோபிதாத்மா ஹ்யுபபோகபுத்யா பதங்கவத் நச்யதி நஷ்டத்ருஷ்டி:||" எனப்பட்டது.



12. வண்டு ஓர்குரு. வண்டு சின்ன புஷ்பமானாலும், பெரிய புஷ்பமானாலும், அதில் உட்கார்ந்து, அதிலுள்ள ஸாரபூதமான மகரந்தத்தையே ஸ்வீகரிக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகவே உறிஞ்சுகிறது. அதனால் அந்த புஷ்பத்திற்கு எந்த கெடுதலும் ஏற்படாமல் பார்த்துக்கொள்கிறது. அதுபோல் யோகியானவன் தன் யோகாப்யாஸத்திற்கு அனுகூலம் ஏற்பட எவ்வளவு அவசியமானதோ அவ்வளவு அல்பாஹாரத்தைத்தான் உட்கொள்ளவேண்டும். பெரியவர்களாயிருந்தாலும் சரி, சின்னவர்களாயிருந்தாலும் சரி, அவரவர்களிடம் உள்ள உத்தமகுணமான ஸாரமாயுள்ளவைகளைத்தான் கிரஹிக்கவேண்டும். அவர்களிடமிருந்து உபகாரம் பெற்றாலும் அது சிறிதாகவும் அவர்களுக்கு அதனால் நஷ்டம் ஏற்படாதிருப்பதாயும் இருக்கவேண்டும். "ஸ்தோகம் ஸ்தோகம் க்ரஸேத் க்ராஸம் தேஹோ வர்த்தேத யாவதா| க்ருஹாதஹிம்ஸந்நாதிஷ்டேத் வ்ருத்திம் மாதுகரீம் முனி:| அணுப்யஸ்ச மஹத்பய்யஸ்ச சாஸ்த்ரேப்ப: குசலோநர:| ஸர்வத: ஸாரமாதத்யாத் புஷ்பேப்யோ இவஷட்பத:" எனப்பட்டது.

18. யானை. ஓர் குரு. அது பிரம்மாண்டமான சரீரம் படைத்திருப்பினும், மிருகங்களில் அதிசயமான பலம் அடைந்திருப்பினும், அதைப் பிடிக்க பெண்யானை அனுப்பப்படுகிறது. பெண் யானை தன துதிக்கையை நீட்ட ஆண் யானை அதைத் தொட்டுக்கொண்டிருக்கையில் யானைப் பிடிப்பவர்கள் அதன் காலில் விலங்கிடுகின்றனர். அப் பெரிய யானை உடனே பந்தனத்திற்குள்ளாகி விடுகிறது. இதிலிருந்து நாம் அறியவேண்டியது என்னவென்றால், எப்பேர்ப்பட்ட விவேகியும் பலவானும் ஸ்திரீக்கு வசமானால் பந்தத்திலேயே சிக்கியவனாவான். ஸன்யாஸியாய் யதி ஆசிரமம் பெற்றவன் ஓர் பெண் பொம்மையையும் கூட காலால்கூட தொடலாகாது. அதனால் அந்த யதி எவ்வளவு வைராக்யம் பெற்றவனாயிருந்தாலும் பின்னிட்டு ஏதோ ஓர் காரணத்தால் விவேக மிழந்து ஸ்திரீ பந்தத்திற்கு உள்ளாகி விடுவான். "பதாபி யுவதிம் பிக்ஷு: நஸ்ப்ருசேத் தாரவீமபி|

ஸ்பிருசன் கரீவ பத்யேத கந்யா அங்கலங்கத:||" என்று சொல்லப்படுகிறது.

மற்றொன்றையும் நாம் தெரிந்துகொள்ளலாம். பெண் யானையுடன் சேர்ந்துவிட்ட ஆண் யானை, அப் பெண்யானையைச் சேர்ந்த இதர யானைகளால் ஹிம்சைப்படுத்தப்படும். ஒரு சமயம் அதனால் மரணத்தையும் அடையகூடும். அதுபோலவே பர ஸ்திரீயிடம் மோகம் கொண்டு அவளுடன் திருட்டு போகத்தை செய்பவன் அந்த ஸ்திரீயின் ஜனங்களால் அடிக்கப்படுவான். ஒரு சமயம் கொல்லப்படவும் நேரிடும். அதனால் விவேகி பர ஸ்திரீயிடம் மோஹம் கொள்ளலாகாது. "காதிகச்சேத் ஸ்திரியம் ப்ராக்ஞ: கர்ஹிசித் ம்ருத்யுமாத்மன:| பலாதிகை ஸ்ஸஹன்யேத கஜை: அன்யை: கஜோயதா" என்று சொல்லப்படுகிறது.

14. தேனீ ஓர்குரு. தேனீ ஒவ்வொரு புஷ்பத்திலும் உட்கார்ந்து அதிலுள்ள ஸாரபூதமான மகரந்தத்தைமட்டில் துளி துளியாக எடுத்துக்கொண்டு அடைகாத்துக்கொண்டே வருகிறது. அதை தானும் குடிப்பதில்லை. இதராளுக்கும் கொடுப்பதில்லை. அதற்குள்ளாக பலிஷ்டனான புருஷன் வந்து தேனீக்கள் சிரமப்பட்டு சேகரித்து வைத்திருக்கும் தேனைப் பிழிந்து எடுத்துப்போய்விடுகிறான். அதுபோலத்தான் கிருபணனான புருஷன் சிறுகச் சிறுக ஸம்பாதித்த திரவியத்தை இதராளுக்கு கொடுத்துவிடலாகாது என்று அறிந்து, தானம் செய்யாமலும் தானும் அதை உபபோகம் செய்யாமலும், இருந்தால் அந்த திரவியத்தை இதரான் தானகொண்டுபோய் அனுபவிப்பான். என்னும் இந்த படிப்பினையை தேனீ அறிவிக்கிறது. தான் சிரமப்பட்டு சம்பாதித்த திரவியத்தை தானம் உபபோகம் இவைகளால் வ்ரயம் செய்யவேண்டியது அவசியமாகும். அப்படிச் செய்யாமல் இருந்துவிட்டால் தேனீக்கு வந்ததிதான் கிருபணனுக்கு வந்து சேரும். "நதேயம் நோப போக்யம் சலுப்தைர்யத்துக்க ஸஞ்சிதம்| புஞ்க்தே ஸ்வமபி தச்சான்யோ மதுஹேவார்த்தவின்மது:" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(தொடரும்)



# ச்ராத்தபோதினி.

(முன் 35-ம் பக்கம் தொடர்ச்சி)

"நஹிருப்யாத் பரம்கிஞ்சித் பித்ரூணாம் வித்யதே ப்ரியம்| ரூப்யம் த்ருஷ்ட் வைவ பிதரோ யாந்தி ப்ரீதி மனுத்தமமாம்" என்றும் "ரூப்யம் ஹஸ்தேன தாதவ்யம் யத்கிஞ்சித் பித்ரு தெய்வதம்| தேனஸ்யு: பிதரஸ்த்திருப்தா: யாவதாபூத ஸம்ப்லவம்" வலது ஆள்காட்டி விரலில் வெள்ளியால் செய்த தர்ஜனி மோதிரத்தால் பித்ருக்களுக்கு எது தத்தம் செய்யப்பட்டாலும் அதன் பலன் கணக்கிடமுடியாதது என்றும் பல பிரமாணங்கள் அறிவிக்கின்றன.

ஸுவர்ணம்: பித்ருக்களுக்கு வெள்ளி எப்படி மிக்க ப்ரீதியை அளிக்குமோ அப்படி தேவர்களுக்கு ஸுவர்ணம் மிக்க ப்ரீதிகரமானது. ஸுவர்ணதானத்திற்கு ஸமானமான தானம் இல்லை.

மற்றும் ச்ராத்தார்ஹமான அநேக வஸ்துக்கள் உண்டு. உளுத்தம் பருப்பு, கோதுமை, சாமை அரிசி, ப்ரியங்கு எனப்படும் மஞ்சள், பயத்தம்பருப்பு, கடுகு, இவைகள் சிராத்தத்தில் ப்ரசஸ்தமானவைகள். கடலைப்பருப்பு சேர்த்தாலும் சேர்க்கலாம், சேர்க்காமல் இருந்தாலும் இருக்கலாம். மல்லி, பெருங்காயம், கூடாது. மிளகாய் பச்சையானதை உபயோகிக்கலாம். உலர்ந்ததை உபயோகிக்கவும் அனுமதி இருக்கிறது. முக்யமாய் சிராத்தத்தில் பிராம்மணர்களுக்கு செய்விக்கப்படும் போஜனம் உத்தமரீதியுள்ள அநேக பதார்த்தங்களை தயாரித்த மஹத்தான போஜனமாய் இருக்கவேண்டும். வியாதிஸ்தர்களுக்கு செய்விக்கும், புளி கூடாது, பருப்பு கூடாது, கடுகு கூடாது, என்னும் தினுசுள்ள போஜனமாய் இருக்கலாகாது. "இஷ்டா பூர்த்தே ம்ருதாஹேச தர்சவ்ருத்தி அஷ்டகாஸுச| பாத்ரேப் யஸ்த்வேஷு காலேஷு தேயம் நைவ குபோஜனம்" என்கிறது பிரமாணவாக்யம். கோதுமை அல்லது ரவா, உளுத்தம்பருப்பு, பயத்தம்பருப்பு இவைகள் சேராமலும் எண்ணெயில் பக்வமானது சேராமலும் செய்யப்பட்ட சிராத்தபோஜனம் போஜனமன்று என்றும் சிராத்த போஜனம் செய்யப்பட்டதாகவே கருதப்படமாட்டாது'' என்கிறது பிரமாணம் "அகோதுமம்

சயத் ச்ராத்தம் மாஷமுத் கவிவர்ஜிதம், தைலபக்வேன ரஹிதம் க்ருதமப்யக்ருதம்பவேத்" என்கிறது பிரமாணம். வாழைப்பழம் மாம்பழம் முதலான பழங்களும், சர்க்கரைவெள்ளி, மாங்காய் இஞ்சி, சுக்கு, பரண்டை விளாமிச்சை முதலான வேர் கிழங்குகளும், கெட்டியான பசும்பால். உரைகுத்தின ஆடைத்தயிர் கொம்புத்தேன், வாஸனை நெய் வெல்லச்சர்க்கரை ரவை பக்ஷணம் முதலான மஸ்கான பதார்த்தங்களும், ஏராளமாய் கலந்திருக்கும் ஸர்வோத்தமமான போஜனம்தான் சிராத்தத்தில் செய்விக்கப்படவேண்டும். பசும்பாலும் பசும் தயிரும்தான் சிராத்தபோஜனத்தில் பிரசஸ்தமானது. பசும் நெய் ஹோமாதிகளுக்கு ப்ரசஸ்தமே அன்றி போஜனத்திற்கு எருமை நெய்தான் உபயோகிக்கப்படவேண்டும், "பயோததி க்ருதம் சைவ கவாம் ச்ராத்தேஷு பாவனம்| மஹிஷீணாம் க்ருதம் ப்ராஹு: ச்ரேஷ்டம் ததபய: க்வசித்" என்கிறது பிரமாணம். எருமைப்பால் கூடாது. பழைய தயிர் கூடாது. புதிதாய் இருக்கும் தயிர்தான் ப்ரசஸ்தமானது, மோர் உபயோகிக்கலாகாது. இதரனை யாசித்து வாங்கிய பாலையோ தயிரையோ நெய்யையோ சிராத்தத்தில் உபயோகிக்கலாகாது. "யாசிதம் ச ததிக்ஷீரம் க்ருதம் சைவ பரித்யஜேத்| ததிபர்யுஷிதம் சைவ தக்ரம் சாபி பரித்யஜேத்" என்கிறது பிரமாணம். வெண்ணை எடுக்காத கடைந்த மோரை தயிர் வ்ரதாதி காலங்களில் உபயோகிக்கலாம். "நான் சிராத்தம் செய்கிறேன், எனக்கு விலையை குறைத்து கொடு, அதிகமாய் கொடு, உத்தமமானதாய் கொடு" என்று, கிரயம் கொடுத்து வாங்கினாலும். சிராத்தத்திற்கு உபயோகப்படும் வஸ்துக்களை யாசிப்பது முற்றிலும் கூடாது, என்று சங்கஸ்மிருதி அறிவிக்கிறது. பூனை வாய்வைத்த வஸ்துக்களையோ முகர்ந்த வஸ்துக்களையோ ஒருக்காலும் சிராத்தத்தில் உபயோகிக்கலாகாது. எள்ளு, உளுந்து, பயர் இவைகளைத் தவிர்த்து வேறு எந்த கருப்ப தானியங்களையோ, பழம் முதலானவைகளையோ சிராத்தத்தில் உபயோகிக்கலாகாது. இரண்டுதரம் பக்வமான, புழுங்கல் அரிசி, அவல், முதலானவைகளையும் உபயோகிக்கலாகாது. பொடலங்காய், வெண்டைக்காய், கத்தரிக்காய், கொத்தவரங்காய், பூசனிக்காய், பாங்கிக்காய், கக்கரிக்காய், கருணைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, முளைக்கீரை அரைக்கீரை. இவைகளை சிராத்தஸம்பந்தமான எந்த பிராம்மண போஜனத்திலும் உபயோகிக்கலாகாது. வாழைக்காய், வழைப்பூ, வாழைத்தண்டு. பலாக்காய், பிரண்டை,



தேங்காய், மாங்காய், வெள்ளரிக்காய், சேப்பங்கிழங்கு. சர்க்கரைவள்ளிக்கிழங்கு, அவத்திகீரை, காரத்தங்காய் இவைகளை உபயோகிக்கலாம். பழங்களில் வாழைப்பழம், மாம்பழம், இலந்தைப்பழம், பலாப்பழம், நெல்லி, மாதுளை, திராக்ஷை, பேரீச்சங்காய், விலாம்பழம், தேங்காய் இவைகள் ப்ரசஸ்தமானவைகள். புஷ்பங்களில் சிகப்பு வர்ணமுள்ள அரளி முதலானவைகள், தாழம்பூ, ஸம்பங்கி, ஜாதி, ரோஜா முதலான பலமான வாஸனையுள்ளவைகள் கூடாது, மல்லிகை. மருதாணி. மருகு, தாமரை முதலானவைகள் ப்ரசஸ்தம். பொதுவாய் ஓர் விதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது சிராத்தம் செய்பவன் விவேகியாய் இருந்து விதி நிஷேத சாஸ்திரங்களை பார்த்தவனாய் இருந்தால், எது அவனுக்கு பிடித்தமாய் உத்தமமானதாய் தோன்றியிருக்கிறதோ அதை தன் பித்ருக்களின் உத்தேசமாய் சிராத்தகாலத்தில் உபயோகிக்கலாம். ஸ்பஷ்டமாய் தடுக்கப்பட்டிருப்பதை உபயோகிக்கலாகாது. "தாதுர் யத்யத் ப்ரியம் தத்தத் தேயம் நித்யம் நசேத் ஹிதத்|" என்கிறது பிரமாணம. கல், மண், சங்கு, புழு, பூச்சி, மயிர், நகம், கண்ணாடி முதலானவை கலந்திருந்ததும் அபரிசுத்தமான பிராணிகளான நாய், பன்றி, பூனை, எலி முதலானவைகள் தொட்டதுமான அன்னத்தை ஒருக்காலும் சிராத்தத்தில் உபயோகிக்கலாகாது. சூடு ஆறிப்போனதும், அதிபக்வமானதும், அபக்வமானதும், கருகிப்போனதும் முந்தியே தயார் செய்யப்பட்டிருப்பதும், இரண்டுதரம் பக்வம் செய்யப்பட்டிருப்பதும், நாக்காலோ மூக்காலோ ருசிபார்க்கப்பட்டிருப்பதும், நாற்றமடைந்ததும். அழுகிப்போனதுமான வஸ்துக்கள் கலந்ததும், சமீப பந்து அல்லாத விதவையால் தயாரிக்கப்பட்டிருப்பதும், முந்திய நாள் ஜலத்தால் பக்வமானதும், தூரஸ்திரீ, சண்டாளன், ஆந்ரன். பதிதன். நபும்ஸகன், பெரும் வியாதியுள்ளவன். குஷ்டரோகமுள்ளவன், குள்ளன், அவயவம் அதிகமாய் வளர்ந்தவன், இத்யாதிகளால் பார்க்கப்பட்டதுமான அன்னத்தை உபயோகிக்கலாகாது. ச்ராத்ததினத்தில் ச்ராத்தத்திற்கு முன்னாடி கர்த்தாவின் குடும்பத்தில் குழந்தைகளுக்கு போஜனம், அதிதிகளுக்கு பிக்ஷை முதலானவைகளைக் கொடுப்பது, வீட்டிற்கு அரிசிமா முதலானவைகளால் கோலமிடுவது, கர்த்தா தன் கழுத்தில் அலங்காரமாலைகளை தரித்திருப்பது, சந்தனாதிகளால் பூஷித்துக்கொள்வது, முதலானவை ஒருக்காலும் கூடாது. வீட்டு ஸ்திரீ ஜனங்களும் தலைமயிரை முடித்துக்கொள்ளாமல் அவிழ்த்துக்கொண்டிருப்பது. கண்ணீர் வடிப்பது, அழுவது, வாய்விட்டு சிரிப்பது. வம்புப்பேச்சுகளை பேசுவது, முதலானவைகளைச் செய்யலாகாது.

சிராத்ததினத்தில் மணிஓசை, வாத்யகோஷம், சங்கீதத்வனி, சேமக்கலம் அடித்தல், க்ரூரமான அரிவாள், கத்தி துப்பாக்கி தடி முதலானவைகளை பகட்டாய் வைத்திருத்தல், வீட்டில் நாய், பூனை, புரா, கிளி, முதலானவை இருப்பது, இவைகள் கூடாது. சிராத்ததினத்தன்று பசும் சாணியைக்கொண்டு வீட்டையும் பாத்திரங்களையும் சுத்தப்படுத்திக்கொண்டு காலாபக்கத்திலேயும் எள்ளை தெளிக்கவேண்டும். ஆங்காந்த ஆட்டைக் கட்டியும் சுத்தப்படுத்திக்கொள்ளலாம். சிராத்த சமையலை சுயமேவ செய்வது உத்தமம். முடியாவிட்டால் அவனுடைய பத்னி, பந்துக்கள், தாயாதிகள், கோத்ரத்தார்கள், பரிசுத்த சீலமுள்ள மித்ரன் இவர்களைக்கொண்டு செய்விக்கலாம். வியபிசாரி, மலடி, விதவை, வேறு கோத்ரத்தில் பிறந்தவள், தாய்குலம், தந்தை குலம் இவைகளைச் சேராதவள், கர்ப்பிணி, சிறு குழந்தையுள்ளவள் முதலானவர்களைக்கொண்டு சிராத்த சமையலை செய்விக்கலாகாது. ப்ராம்மணன் எப்போதும் ப்ரசஸ்தமானவன். அவனைக்கொண்டு செய்விப்பது உத்தமமானது. சமையல் பாத்திரங்கள் தங்கம், வெள்ளி, தாமிரம், வெங்கலம், பித்தளை, இவைகளால் செய்யப்பட்டிருப்பவைகளாய இருக்கலாம். ஒருக்காலும் இரும்பு பாத்திரத்தில் சமைக்கலாகாது. பக்வான்னாதிகளை மரப்பாத்திரத்தில் வைத்திருக்கலாம். காய்கறிகளை நறுக்கவும், எண்ணெயில் வருக்கவும் அவசியமான இரும்பு சாமான்களைத்தவிற வேறு எந்த இரும்பும் சிராத்ததினத்தன்று கண்ணிற்படலாகாது. எந்த அக்னியில் சமைக்கப்படுகிறதோ அதே அக்னியில்தான் அன்று வைச்வதேவம் ஹோமம் முதலானவைகள் செய்யப்படவேண்டும். போஜனம் செய்யும் பாத்ரங்கள் தங்கம் வெள்ளி வெங்கலம் இவைகளால் செய்யப்பட்ட தட்டு முதலானவைகளாய் இருக்கலாம். பலாச இலை, தாமரை இலை, வாழை இலை, இலுப்பை இலைகள் தைத்து உபயோகிக்கலாம். ச்ராத்ததினத்தில் கர்த்தாவும் போக்தாவும் அடியிற்கண்ட நியமத்துடன் இருக்கவேண்டும் ஸ்திரீ ஸங்கம், இரண்டாந்தரம் ஆஹாரம் செய்தல், பொய் பேசுதல், இதராளுக்கு பாடம் சொல்லுதல், சீட்டு ஆடுதல், சிரமப்பட்டு பாரத்தை வகித்தல், இதராளை ஹிம்சித்தல், இதராளுக்கு தானம் செய்தல், இதராளிடமிருந்து தானாதிகளைப் பெறுதல், களவாடுதல், வழிநடத்தல், பகலில் தூங்குதல், கலஹம் செய்தல், வியவஹாரம் பேசுதல் இவைகளை அவசியம் விலக்கிவிடவேண்டும்.

(தொடரும்)



## செய்திகள்.

வழக்கப்படி ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளின் வருஷாந்திர மகாசமாராதனை உற்சவம் மூன்று நாட்கள் நாளது வருஷம் ஜூன்மீ 12, 13, 14௳களில் செவ்வனே நடந்தது. வெளியூர்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் வந்திருந்தனர். ஸ்ரீ ஸ்வாமிகள் இந்த காரிய நிர்வாகத்தை நடத்த தமது குருவான ஸ்ரீ ஸுவ்ரதீந்திரதீர்த்தரின் ஸ்ரீ பாத புத்ராகிய, மைசூர் ஸம்ஸ்கிருத பாடசாலை, நியாய வேதாந்தவித்வான் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்களை அனுப்பியிருந்தார். ஆராதனையை கேவலம் போஜனாதிகளுடன் மட்டில் நடத்தாமல் பண்டிதர்களைக்கொண்டு உபன்யாசங்கள் வாக்யார்த்த விசாரங்கள் ஹரிகதை ஊர்வலம் முதலானவைகளுடன் இவர் ஊக்கத்துடன் நடத்திவைத்தார். இந்த பிருந்தாவனத்தின் தினசரி நிர்வாக ஊழல்களைப்பற்றி அநேகர் இவரிடம் அத்தாக்ஷியுடன் அறிவித்ததுமல்லாமல், இவர் எதிரிலேயே அநேகர் கையெழுத்திட்டு மகஜர்களை ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு அனுப்பினார்கள். தான் நேரில சீக்கிரமே வந்து ஸ்ரீரங்கத்தில் நடப்பதுபோல் ஸேவார்த்திகளுக்கு ஸேவா திட்டங்களை ஏற்படுத்தி பிருந்தாவன நிர்வாகத்தில் இனி எந்த புகாரும் ஏற்படாதபடி சாசுவதமான சீர்திருத்தங்களை தான் செய்யப்போவதாய் இவர் வாக்களித்துப் போயிருக்கிறார். இது சம்பந்தமாய் நாம் பல வருஷங்களாய் பலவாறு எத்தனித்தும், பிரசுரித்தும், ஸ்ரீ ராகவேந்திரமடம் ஸ்வாமிகள், இந்த காரியத்தில் போதுமான கவனத்தை செலுத்தவில்லை. இதற்காக சர்க்கார் உதவியை நாட எமக்கு உத்தேசமில்லை. மேற்கண்ட ஸ்ரீ பாதபுத்ரான் ஸ்ரீனிவாஸாசாரியார் மூலமாய் இப்போதாவது ஸ்ரீ ஸ்வாமிகள் ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறோம்.

மதுரையில் 21—5—50௳யன்று ஸ்ரீ மத்வா சேவாசங்கம் என்று ஓர் ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாயும் அதற்கு ஸ்ரீமான்களான டாக்டர் H. சாமராவ் பிரஸிடெண்டும் N. ஸ்ரீனிவாஸராவ் ஸெக்ரெடரியுமாக காரிய நிர்வாகம் செய்யப்போவதாயும் மதுரை உயர்தரகல்லூரி ஸம்ஸ்கிருத ப்ரொபெஸர்

வருடசந்தா ரூபா 3. Regd. No. M. 2419

சுதீரம் வேதாந்தத்தினம் ஸ்ரீனிவாஸாசாரியாரால் த்வைத மதமும் த்வைதாசாரியாரும் என்று உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் கரூர் வெங்கடரமண பாகவதர் சேலம் வெங்கடராவ் இவர்களால் ஹரிகதைகள் நடத்தப்பட்டன வென்றும் மாத்வர்களில் ஒற்றுமை வளர்ப்பதும் மதக்கொள்கைகள் பிரசாரம் செய்வதுமாகிய பல நோக்கங்களை இச் சபை கொண்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## விசேஷ தினங்கள்

| | | |
|---|---|---|
| 30—7—50 | பானுவாரம் | சிரவணம் உப. இல்லை. விஷ்ணுப. உப. இல்லை. |
| 3—8—50 | குருவாரம் | ஸ்ரீ விஜயதீர்த்தர் புண்யதினம். |
| 9—8—50 | புதவாரம் | ஏகாதசி உப. |
| 13—8—50 | பானுவாரம் | தர்சம். திலதர்ப்பணம். விஷ்ணுப. உப. |
| 17—8—50 | குருவாரம் | நாக சதுர்த்தி. |
| 18—8—50 | சுக்கிரவாரம் | நாகபஞ்சமி. |
| 23—8—50 | புதவாரம் | பாண்டிரங்கிசலாரி, ஆத்பம், வியாஸராஜ மடம் இவர்களுக்கு இன்றுதான் ஏகாதசி உப. |
| 24—8—50 | குருவாரம் | ஷடியார்களுக்கு த்வாதசி காலை மணி 6-45க்கு மேல் தயிர் வ்ரதம். இதராளுக்கு மட்டில் ஏகாதசி உப. |
| 25—8—50 | சுக்கிரவாரம் | வரலக்ஷ்மீ விரதம். |
| 26—8—50 | சனிவாரம் | ரிக்வேதி உபாகர்மம். சிரவணம் உப, விஷ்ணுப. உப. |
| 27—8—50 | பானுவாரம் | பௌர்ணமி யஜுர்வேதி உபாகர்மம் விஷ்ணுப. உப. |
| 28—8—50 | சோமவாரம் | காயத்ரீஜபம். |
| 29—8—50 | மங்களவாரம் | ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் புண்யதினம். |

210426

N. B:—ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் அதி அற்புத ஜீவிய சரிதிரம் தபாற்கூலியுள்பட ரூ. 1—1—0.

Printed by M Subramania Iyer at Sri Venkateswar Power Printing Works
Edited & Published by Bhagavatha Ranganathachariar Kumbakonam.